## எரிசக்தி ஆதாரங்களை திறம்பட பன்முகப்படுத்த அரசு தவறியுள்ளது!

# சிலிண்டர் எரிவாயு பற்றாக்குறையைச் சமாளிக்க ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

## மாநிலங்களவையில் நிதி மசோதா மீது உரையாற்றிய மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் கேள்வி!

**புதுடெல்லி, மார்ச் 31 - மாநிலங்களவையில் நிதி மசோதா 2026 ன் மீது கழக உறுப்பினர் பி.வில்சன் பேசும் போது, எரிசக்தி ஆதாரங்களை திறம்பட பன்முகப்படுத்த ஒன்றிய அரசு தவறியுள்ளது என்றும் சிலிண்டர் எரிவாயு பற்றாக் குறையைச் சமாளிக்க ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் கேள்வி எழுப்பினார்.**

மாநிலங்களவையில், நிதி மசோதா 2026 ன் மீது தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் பேசியதாவது:-

இந்த ஒன்றிய அரசானது 'சப்கா சாத், சப்கா விகாஸ்' என்ற வாக்குறுதியோடுதான் ஆட்சிக்கு வந்தது. ஆனால், இன்று நாம் காண்பதோ 'சப்கா போஜ், சிர்ப் உன்கா விகாஸ்' அதாவது அனைவர் மீதும் சுமை, ஒரு சிலருக்கு மட்டுமே வளர்ச்சி என்ற ஆட்சியைத்தான், அந்த வகையில் சாமானிய மக்கள் மீது சுமையையும், ஒரு சில குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே பலன்களையும் வழங்கும் ஒரு ஆட்சியாக ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

இந்த அரசு வெறும் முழக்கங் களை வைத்தே இயங்குகிறது. இந்த நிதிநிலை அறிக்கையும் அதே போன்ற வெற்று முழக்கங்களால் மட்டுமே நிரம்பியுள்ளது.

இளைஞர் சக்தி சார்ந்த நிதிநிலை அறிக்கை என்று தம்பட்டம் அடிக்கப்படும் இந்த பட்ஜெட்டை வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிய நான் ஒரு உதாரணத்துடன் விளக்குகிறேன்.

**வேலையில்லா திண்டாட்டம்!**

இந்தியா இன்று வேலையில்லாத்திண்டாட்டத்தின் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. இதில் மிகவும் அதிர்ச்சியளிக்கும் விஷயம் என்னவென்றால், சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் மனித மேம்பாட்டு நிறுவனம் இணைந்து வெளியிட்ட 'இந்தியா வேலைவாய்ப்பு அறிக்கை 2024'ன் படி, நம் நாட்டில் வேலையில்லாதவர்களில் 83 சதவீதம் பேர் இளைஞர்கள் என்பதுதான்.

*'State of Working India 2026'* என்ற தலைப்பிலான அறிக்கை, 29 வயதுக்குட்பட்ட பட்டதாரி இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் 40 சதவீதமாக உள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளது.

இதன் பொருள் என்னவென்றால், படித்த இளம் இந்தியர்களில் பத்தில் நான்கு பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதுதான்.

இந்த நிதி மசோதா அந்த இளைஞர்களுக்கு என்ன வழங்குகிறது? 'யுவசக்தி' போன்ற முழக்கங்களையா?... முழக்கங்கள் ஒருபோதும் வேலைவாய்ப்புகளை உருவாக்கிவிடாது. நகர்ப்புற இளைஞர்களுக்குத் தேசிய அளவில் எந்தவொரு வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டமும் இல்லை. வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான எந்தவொரு சட்டபூர்வமான கட்டமைப்பு வசதியும் இங்கு இல்லை.

**சமூக பாதுகாப்பு திட்டம் இங்கு இல்லை!**

இந்தியாவின் உழைக்கும் சக்தியில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா மற்றும் கிக் தொழிலாளர்களுக்கு எந்தவொரு பாதுகாப்பும் இல்லை. அவர்களுக்கு என்று எந்தவொரு உலகளாவிய சமூகப் பாதுகாப்புத் திட்டமும் இங்கு இல்லை.

இந்தியாவில் நிலவும் ஏற்றத்தாழ்வு ஏற்க முடியாத அளவை எட்டியுள்ளது. 'உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை 2026'ன் படி, நாட்டின் வருமானத்தில் 58 சதவீதத்தை முதல் 10 சதவீதத்தினர் மட்டுமே அபகரித்துக் கொள்கின்றனர். மேலும், நாட்டின் மொத்தச் செல்வத்தில் 65 சதவீதம் இவர்களிடமே குவிந்துள்ளது. அதே வேளையில், நாட்டின் கீழடுக்கில் உள்ள 50 சதவீதத்தினர் அதாவது 70 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள், வெறும் 15 சதவீத வருமானத்தை மட்டுமே பெறுகின்றனர்.. மேலும், நாட்டின் மொத்தச் செல்வத்தில் இவர்களிடம் இருப்பது வெறும் 6 சதவீதம் மட்டுமே.

**பசி குறியீட்டில் 102 வது இடம்!**

நேற்றுதான் சமூக ஊடகங்களில் ஒரு பதிவைப் பார்த்தேன்.. 2014ஆம் ஆண்டிலிருந்து அம்பானியின் சொத்து மதிப்பு 500 சதவீதமும், அதானியின் சொத்து மதிப்பு 1000 சதவீதத்திற்கும் மேலாகவும் உயர்ந்துள்ளது. ஆனால், அதே காலகட்டத்தில் உலகப் பசி குறியீட்டில் இந்தியா 52வது இடத்திலிருந்து 102வது இடத்திற்கு வீழ்ந்துள்ளது.

இந்திய வணிகங்கள் மற்றும் பெருநிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு நான் எதிரானவன் அல்ல. சொல்லப்போனால், இந்தியத் தொழில்துறையின் வளர்ச்சியால்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சியே உந்தப்படுகிறது. ஆனால், இங்கே கேள்வி என்னவென்றால், நாட்டில் நிலவும் வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் சமூகத்தின் நடுத்தர மற்றும் அடித்தட்டு பொருளாதார வர்க்கத்தினர் மீது இந்த அரசு காட்டும் அலட்சியப்போக்கும்தான்.. அப்படியென்றால், இந்த வருமான ஏற்றத்தாழ்வைக் களைவதற்கும், கடும் வறுமையில் வாடுபவர்களுக்கு உதவுவதற்கும் இந்த நிதி மசோதா என்ன செய்கிறது? ஒன்றுமில்லை.

இந்த மசோதா பெரும் பணக்காரர்களுக்கு வரி விதிக்கிறதா? செல்வ வரி அல்லது பரம்பரைச் சொத்து வரியை அறிமுகப்படுத்துகிறதா? குறைந்தபட்சம் செல்வப் பகிர்வுக்கான முயற்சியையாவது எடுக்கிறதா? இல்லை. மாறாக, இது பெருநிறுவனங்களுக்குச் சலுகைகளை வாரி வழங்குகிறது குறைந்தபட்ச மாற்று வரி 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது..

**கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கம்!**

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான வரி விடுமுறை 20 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது; தரவு மையங்களுக்கான 'சேஃப் ஹார்பர் மார்ஜின்' 15 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது; மேலும் செமிகண்டக்டர்கள், அரிய வகை தாதுக்கள் மற்றும் மின்னணுவியல் போன்ற மூலதனம் அதிகம் தேவைப்படும் துறைகளுக்குப் பெரும் ஊக்கத்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன இவை அனைத்தும் ஒரு சில கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கத்தில் உள்ள துறைகள். உண்மையில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது சமூக நலச் செலவினங்கள் ரூ.59,456 கோடி வரை குறைக்கப்பட்டுள்ளது. பாலின நிதிநிலை அறிக்கையில் மட்டுமே ரூ.51,144 கோடி குறைக்கப்பட்டுள்ளது.. ஏழை எளியவர்களைக் காக்கும் திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், பிரதமரின் வீட்டு வசதித் திட்டம், ஆயுஷ்மான் பாரத், பள்ளிச் சத்துணவுத் திட்டம் மற்றும் பயிர் காப்பீட்டுத் திட்டம் என அனைத்தும் நிதி ஒதுக்கீட்டில் வஞ்சிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசுக்குத் தெரிந்த ஒரே மக்கள் நலப் பொருளாதாரம் என்பது 'நேரடிப் பணப் பரிமாற்றம்' மட்டுமே.

பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தேர்தல் காலங்களில் மட்டுமே இந்த நேரடிப் பணப் பரிமாற்றங்கள் நடக்கின்றன. அதுவும் தேர்தலுக்கு முன்னால் மட்டும்தான். தேர்தல் முடிந்த பிறகு, அனைவருக்கும் பொதுவான அடிப்படை வருமானத்தை உறுதி செய்யும் எண்ணம் இந்த அரசுக்குத் துளியும் இல்லை.

உர மானியங்கள் குறைக்கப்பட்டுள்ளன. உணவு மானியங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.. எரிபொருள் ஆதரவு சுருங்கி வருகிறது. கோடீஸ்வரர்களின் வங்கிக் கணக்குகளை நிரப்புவதற்காக, ஏழைகளின் உயிர்நாடியை ஒன்றிய அரசு பறித்து வருகிறது.

சிலிண்டர் எரிவாயு பற்றாக்குறையைச் சமாளிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

இன்று உலகிலேயே LPG ஐ அதிகம் நுகரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. நமது நாட்டின் ஆண்டு நுகர்வு தோராயமாக 3.1 கோடி டன்களாக உள்ளது. ஆனால், நமது தேசிய சேமிப்புத் திறனோ வெறும் மூன்று முதல் நான்கு வார கால நுகர்வை மட்டுமே ஈடுகட்டக்கூடிய அளவில் உள்ளது; மேலும் நமது உத்திசார் கையிருப்பு என்பது மிகவும் வரம்பிற்குட்பட்டதாகவே இருக்கிறது. நமது LPG தேவையில் சுமார் 60 முதல் 67 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது.. இதில் பெரும்பகுதி ஹார்முஸ் நீரிணை வழியாக மேற்கு ஆசியாவிலிருந்து வருகிறது. இது, புவிசார் அரசியல் மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இந்தியா எளிதில் இலக்காகக்கூடிய ஒரு சூழலை உருவாக்குகிறது. எரிசக்தி ஆதாரங்களை திறம்பட பன்முகப்படுத்த இந்த அரசு தவறியதே இதற்கு முக்கியக் காரணமாகும்.

எரிவாயு குழாய்ப் பாதைகள் மற்றும் முனையங்கள் போன்ற அவசியமான இயற்கை எரிவாயு உள்கட்டமைப்புகளை உருவாக்குவதில் இந்த அரசு காட்டி வரும் மெத்தனப்போக்கு, 'எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரம்' என்ற இலக்கை எட்டுவதற்குப் பெரும் தடையாக உள்ளது.

உதாரணமாக, கொச்சி LNG முனையமானது பல ஆண்டுகளாக அதன் முழுத் திறனுக்கும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில், குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்பு வசதி இருந்தும், அதனைப் பயன்படுத்தாதவர்களின் எல்பிஜி இணைப்பு துண்டிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இது மிகவும் கொடுங்கோன்மையான நடவடிக்கையாகும். அதிகப்படியான செலவு மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள் என மக்கள் புதிய முறைக்கு மாறாததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இத்தகைய மாற்றங்களை நாம் மென்மையாகவும், போதிய கால அவகாசம் வழங்கியும் ஊக்கப்படுத்த வேண்டுமே தவிர, கட்டாயப்படுத்தியோ அல்லது உடனடியாகவோ திணிக்கக் கூடாது.

**வரி பயங்கர வாதம்!**

மேற்கு ஆசியாவில் தற்போது நிலவும் சர்வதேசப் பதற்றங்களைச் சமாளிக்க இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதேனும் ஒரு சிறப்புத் திட்டம் உள்ளதா?

நடுத்தர வர்க்கத்தினரைப் பொறுத்தவரை, இந்த மசோதாவில் முறையான வரிச் சலுகைகள் எதுவும் இல்லை. அவர்களின் சேமிப்பை ஊக்குவிப்பதற்கோ அல்லது வருமானத்தைத் தடையின்றி வெளிப்படுத்துவதற்கோ இதில் எந்தவிதத் தூண்டுதலும் இல்லை. மாறாக, நாம் இங்கே காண்பது அதிகாரங்களின் ஆபத்தான விரிவாக்கத்தையே ஆகும் வரி அதிகாரிகள் இப்போது கால வரம்பு எதுவுமின்றி, முடிந்துபோன வழக்குகளில் கூட, பழைய வரி மதிப்பீடுகளை மீண்டும் திறக்க முடியும். இது சட்டப்பூர்வ ஆதரவுடன் நடத்தப்படும் ஒரு 'வரி பயங்கர வாதம்' ஆகும். பட்ஜெட் முன்மொழிவு குறித்த எனது உரையில், வரி நிர்வாகத்தில் நிலவும் இடைவிடாத 'சிவப்பு நாடா' முறையிலிருந்து எந்தவித விடுதலையும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அதிலிருந்து நிவாரணம் வழங்க இந்த நிதி மசோதாவில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான சட்டபூர்வமான உத்தரவாதம் இன்னும் வழங்கப்படவில்லை.. கடன் சுமை, காலநிலை அபாயங்கள் அல்லது விலை ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்யும் விரிவான விவசாயச் சீர்திருத்தங்கள் எதுவுமில்லை. விவசாயிகள் தொடர்ந்து துயரப்படுகிறார்கள், தற்கொலைகள் தொடர்கின்றன, ஆனால் இந்த அரசாங்கம் அதனைப் பாராமுகமாகவே வேடிக்கை பார்க்கிறது.

பாதுகாப்பு , எரிசக்தி , துறை முகங்கள் மற்றும் விமான நிலையங்கள் போன்ற முக்கியத் துறைகளில் ஏகபோக ஆதிக்கம் அதிகரித்து வருவதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது தேசிய நலனுக்கு எதிரானது.

கடந்த சில ஆண்டுகளில், அனைத்து நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையங்களும், மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்களின் நிபந்தனைகளை மீறி, நிலக்கரியை *Pass Through* அடிப்படையில் கொள்முதல் செய்ய வேண்டும் என்று இந்திய அரசு ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால் மின் விநியோக நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் மின்சாரத்தின் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளது.. இறுதியில் இந்தச் சுமை நுகர்வோர் மீதே சுமத்தப்படுகிறது.

மின்சாரச் சட்டத்தின் 11வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட இந்த Pass Through உத்தரவுகளால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி குறித்து அரசாங்கம் ஒரு முழுமையான தணிக்கையை மேற்கொள்ளும் என்றும், இனிவரும் காலங்களில் இத்தகைய தற்காலிக உத்தரவுகளைப் பிறப்பிக்காமல், இறக்குமதி நிலக்கரியின் அதிகப்படியான விலையைச் சமாளிக்க ஒரு முறையான திட்டத்தை உருவாக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

4.3 சதவீத நிதிப் பற்றாக்குறை இலக்கை எட்டியுள்ளதாக அரசாங்கம் நிதி மேலாண்மைத் திறனைப் பறைசாற்றுகிறது. ஆனால், மக்கள் நலத் திட்டங்களை முடக்கியும், மானியங்களைக் குறைத்தும், ஏழை எளிய மக்கள் மீது சுமையைச் சுமத்தியும் இந்த இலக்கை ஒருபோதும் எட்ட முடியாது.

அதே நேரத்தில், இந்தியாவின் கடன்ஜிடிபி விகிதம் 55.6 சதவீதமாக உள்ளது,... வட்டி செலுத்துவதற்கே மொத்தச் செலவில் சுமார் 20 சதவீதம் செலவிடப்படுகிறது. மொத்த வரி வருவாய் வளர்ச்சி வெறும் 8 சதவீதமாக மட்டுமே உள்ளது. ஜிஎஸ்டி வசூல் தேக்கமடைந்துள்ளது. நுகர்வுத் தேவை குறைந்து வருகிறது. யுபிஐ வளர்ச்சியும் கூட மந்தமடைந்துள்ளது.. இவை அனைத்தும் இந்தியப் பொருளாதாரம் தனது வேகத்தை இழந்து வருவதற்கான தெளிவான அறிகுறிகளாகும்.

**லாபத்தை தனியாருக்கு தாரை வார்ப்பது!**

IFSC அலகுகளுக்கான வரிச் சலுகை 20 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.. அத்தியாவசியத் தாதுக்களுக்கு இறக்குமதி வரி விலக்கு, தரவு மையங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் உள்கட்டமைப்பு இடர் உத்தரவாத நிதி எனச் சலுகைகள் அள்ளி வழங்கப்பட்டுள்ளன.. இது லாபத்தைத் தனியாருக்குத் தாரை வார்த்து, நஷ்டத்தை மக்கள் மீது சுமத்தும் ஒரு தந்திரமான வழிமுறையாகும். இது ஒரு மோசமான முதலாளித்துவ வடிவமாகும். அரசாங்கம் 3.2 சதவீதப் பணவீக்கம் பற்றிப் பேசலாம், ஆனால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையை விட்டு வெளியே வந்து உண்மையான இந்தியா எப்படி உள்ளது பார்க்க வேண்டும்.

**வாக்குறுதிகள் என்னவானது?**

ஒரு பொறியியல் பட்டதாரி வாடகை கார் ஓட்டுகிறார்.

ஒரு விவசாயி விதைகளுக்காகக் கடன் வாங்குகிறார்.

ஒரு சிறு தொழில் சத்தமில்லாமல் மூடப்படுகிறது.

ஒரு குடும்பம் தனது உணவில் இருந்து புரதச்சத்தை குறைத்துக்கொள்கிறது.

பட்டதாரிகள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள்.

வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால், அதன் விளைவுகள் எங்கே?

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தீர்கள்.. 12 ஆண்டுகள் கடந்துவிட்டன, உருவாக்கப்பட்ட அந்த 24 கோடி வேலைவாய்ப்புகள் எங்கே? விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தீர்கள், அந்த வருமானம் எங்கே?

சோப்பு, மளிகைப் பொருட்கள்,துணிமணிகள் வாங்கும் போதும், கைபேசிக்கு ரீசார்ஜ் செய்யும் போதும், பள்ளி நோட்டுப் புத்தகங்கள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் போதும் சாமானிய மக்களே இந்த மறைமுக வரிகளைச் செலுத்துகிறார்கள்.

**மறைமுக வரி!**

மறைமுக வரி விதிப்பு என்பது, ஒரு ஏழை மனிதனால் அதனைச் சுமக்க முடிந்தாலும் முடியா விட்டாலும், அவன் மீது திணிக்கப்படுகிறது டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் இந்த வார்த்தைகள் இன்றைய சூழலுக்கு மிகப்பொருத்தமானவை.

ஒரு கோடீஸ்வரரும் ஜிஎஸ்டி செலுத்துகிறார். ஒரு கட்டுமானத் தொழிலாளியும் ஜிஎஸ்டி செலுத்துகிறார்.

ஒரே வரி.. ஒரே விகிதம்.. ஆனால் அதன் சுமை வேறுபட்டது.

பணக்காரர்கள் வரி விதிப்பைத் தங்களது கணக்குப் பதிவேடுகளில் உணர்கிறார்கள். ஆனால், ஏழைகள் வரி விதிப்பைத் தங்களது மளிகைப் பொருட்களில் உணர்கிறார்கள். ஒரு நடுத்தர வர்க்கத் தாய் என்பவர் நாட்டின் நிதிப் பற்றாக்குறையைக் கவனிப்பதில்லை.. அவர் அரிசி மற்றும் வெங்காயத்தின் விலையைத் தான் கவனிக்கிறார்.

இந்த நிதி நிலை அறிக்கையானது, ஏழைகளை மிகக் கடுமையாகப் பாதிக்கும் வரி முறையைச் சீரமைப்பதில் ஒன்றிய அரசு தோல்வியடைந்துள்ளதைக் காட்டுகிறது. வரி வசூல் மிகவும் மந்தமாக வளர்ந்து வரும் நிலையிலும், வரி ஏய்ப்பைத் தடுக்கவோ அல்லது வரி செலுத்துவோரின் எண்ணிக்கையைஅதிகரிக்கவோ எந்தவொரு தெளிவான திட்டமும் அரசிடம் இல்லை.

சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மிகக் குறைந்த நிதியாதாரங்கள் குறித்து நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஐயா, சட்டத் தொழிலில் ஒரு மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவுப் புரட்சியின் விளிம்பில் நாம் இன்று நிற்கிறோம்.

இந்தக் காலகட்டத்தில், நீதிமன்றங்களை நவீனப்படுத்துவது குறித்தும், நீதிபதிகளின் பணிச்சுமையைக் குறைத்து, அவர்கள் சிறந்த முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக அதிநவீனத் தொழில்நுட்பங்களை அவர்களுக்கு வழங்குவது குறித்தும் நாம் விவாதித்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்தியா முழுவதும் உள்ள மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் சில மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்கள் கூட கணினிகள், கழிப்பறைகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமலேயே தவித்து வருகின்றன என்பதுதான் நிதர்சனமான உண்மை.

நான் நாடு முழுவதும் உள்ள பல உயர் நீதிமன்றங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். ஆனால் அவற்றின் உள்கட்டமைப்பு மிகவும் மோசமாக உள்ளது. நீதித்துறைக்கு நிதி ஒதுக்குவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கும். வணிக ரீதியான வழக்குகள் விரைவாகத் தீர்க்கப்படும் என்ற உறுதி கிடைக்கும்போது, இந்தியத் தொழில்துறையின் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சொத்துத் தகராறுகள் தீர்க்கப்படும்போது, முடங்கிக் கிடக்கும் அந்தச் சொத்துக்களைப் பணமாக்கிப் பொருளாதாரப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர முடியும்.

எனவே, நிதியமைச்சர் அவர்கள், நீதித்துறையின் தேவைகளை, குறிப்பாக உள்கட்டமைப்பு வசதிகளைக் கவனிக்க வேண்டுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து நான் பல முறை பேசியுள்ளேன். தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியம், அவர்கள் செய்யும் பணிக்கு இணையாக இல்லை. நமது நீதிபதிகளுக்கு நாம் நிதி பாதுகாப்பை வழங்க வேண்டியது அவசியமாகும்.

**நடுத்தர வர்க்கத்தின் சேமிப்புகள் கரைந்து வருகின்றன!**

உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 70ஆக உயர்த்த வேண்டும். உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியம், அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்திற்கு நிகராக இருக்க வேண்டும். மேலும், ஓய்வுபெறும் நீதிபதிகளை அரசாங்கப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.. தீர்ப்பாயங்களில் அவர்கள் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்ய வேண்டும்.

நடுத்தர வர்க்கத்தினரின் வருமானம் தேக்கமடைந்துள்ளது. சேமிப்புகள் கரைந்து வருகின்றன. எதிர்காலக் கனவுகள் சிதைந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும், இது ஒரு வெற்றிக் கதை என்று சொல்லப்படுகிறது. ஆனால் உங்கள் ஆட்சியின் கீழ், பணக்காரர்கள் மட்டுமே மேலும் பணக்காரர்களாக மாறுகிறார்கள்.

**தமிழ்நாட்டை வஞ்சிக்கும் போக்கு!**

நிதி மேலாண்மை மற்றும் நிதி மேலாண்மை குறித்து மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அடிக்கடி பாடம் எடுக்கிறது. ஆனால், அதன் சொந்தக் கடன் வளர்ச்சிப் பாதையோ செங்குத்தாகவும், தொடர்ச்சியாகவும் உயர்ந்து வருவதைக் காட்டுகிறது. இது ஒன்றிய அரசின் நிதி மேலாண்மை எவ்வளவு காலம் நீடிக்கும் என்ற கடுமையான கேள்விகளை எழுப்புகிறது.

மேலும் அமைச்சகம் அளித்துள்ள பதிலானது, இந்தியாவின் நிதிசார் கூட்டாட்சி அமைப்பில் நிலவும் ஆழ்ந்த கவலைக்குரிய சமமின்மையை, குறிப்பாகத் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் போக்கை வெளிப்படுத்துகிறது. ஒன்றிய அரசு தமிழ்நாட்டிலிருந்து 2022 23 ல் ரூ.1,75,088 கோடியும், 202324 ல் ரூ.2,07,314 கோடியும், 202425 ல் ரூ.2,17,165 கோடியும் என, கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் மொத்தம் ரூ.5,99,567 கோடி வரி வருவாயைச் சேகரித்துள்ளது.

இருப்பினும், இதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் வரிப் பங்கிலிருந்து தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி 202223 ல் ரூ.38,731 கோடி, 202324 ல் ரூ.46,072 கோடி மற்றும் 202425 ல் ரூ.52,492 கோடி என மொத்தம் ரூ.1,37,295 கோடி மட்டுமே. உதாரணமாக, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிலிருந்து வசூலிக்கும் ஒவ்வொரு ரூ.1 வரி வருவாய்க்கும், ஒன்றிய அரசின் வரிகளின் பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பிலிருந்து மாநிலத்திற்கு சுமார் ரூ.0.23 மட்டுமே திரும்பக் கொடுக்கிறது.

இது நிதிசார் அநீதியை தவிர வேறொன்றுமில்லை. பிற மாநிலங்களுடனான ஒப்பீடு இந்தச் சமமின்மையின் அளவை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, இதே மூன்று ஆண்டு காலத்தில் உத்தரப் பிரதேசம் ஒன்றிய அரசுக்கு ரூ.3,62,457 கோடி வரிப் பங்களிப்பை வழங்கியுள்ளது. இருப்பினும், ஒன்றிய வரிகளிலிருந்து உத்தரப் பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட நிதி ரூ.6,03,220 கோடியாகும்.

இதன் பொருள் என்னவென்றால், உத்தரப் பிரதேசத்திலிருந்து ஒன்றிய அரசு வசூலிக்கும் ஒவ்வொரு 1 ரூபாய் வரி வருவாய்க்கும், மத்திய வரிகளின் பங்கிலிருந்து அந்த மாநிலத்திற்கு சுமார் ரூ.1.66 திரும்பக் கிடைக்கிறது. பீகாரின் விஷயத்தில் இந்தச் சமமின்மை இன்னும் அதிர்ச்சியூட்டும் வகையில் உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் பீகாரிலிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த வரி ரூ.49,215 கோடி மட்டுமே. ஆனால், ஒன்றிய அரசின் வரிகளின் பங்கிலிருந்து அந்த மாநிலத்திற்கு வழங்கப்பட்ட நிதியோ ரூ.3,38,549 கோடியாகும். உண்மையில், பீகாரிலிருந்து ஒன்றிய அரசு வசூலிக்கும் ஒவ்வொரு 1 ரூபாய் வரி வருவாய்க்கும், ஒன்றிய அரசின் வரிகளின் பங்கிலிருந்து அந்த மாநிலத்திற்கு கிட்டத்தட்ட 6 ரூபாய் 90 பைசா திரும்பக் கிடைக்கிறது.

இந்தியாவின் வலுவான பொருளாதாரப் பங்களிப்பாளர்களில் ஒன்றாகவும், தேசிய வரி வருவாயை ஈட்டித் தரும் முக்கிய மாநிலமாகவும் விளங்கும் தமிழ்நாடு, தான் வழங்கும் பங்களிப்பில் மிகச்சிறிய பகுதியை மட்டுமே திரும்பப் பெறுகிறது. அதே நேரத்தில், மிகக் குறைவான பங்களிப்பை வழங்கும் பல மாநிலங்கள், குறிப்பிடத்தக்க அளவில் மிகப் பெரிய நிதிப்பகிர்வைப் பெறுகின்றன.

**தமிழ்நாட்டு மக்கள் தகுதியானவர்கள்!**

தாங்கள் உருவாக்கித் தரும் வளங்களில் நியாயமான மற்றும் சமமான பங்கைப் பெறத் தமிழ்நாட்டு மக்கள் தகுதியானவர்கள். கூட்டுறவு கூட்டாட்சி என்ற தத்துவத்திற்கு ஏதேனும் உண்மையான அர்த்தம் இருக்க வேண்டும் என்றால், இந்த அப்பட்டமான முரண்பாட்டை ஒன்றிய அரசு சரிசெய்ய வேண்டும். தேசிய வளங்களின் பங்கீடு என்பது, சிறப்பாகச் செயல்படும் மாநிலமான தமிழ்நாட்டைத் திட்டமிட்டுப் பாதிப்பதாகவோ அல்லது அதன் வளர்ச்சிக்காகவே அந்த மாநிலத்தைத் தண்டிப்பதாகவோ அமையாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஒன்றிய அரசு உண்மையாகவே கூட்டுறவு கூட்டாட்சியில் நம்பிக்கை கொண்டிருந்தால், ஒரு எளிய கேள்விக்கு அது பதிலளிக்க வேண்டும்: தமிழ்நாடு செலுத்தும் ஒவ்வொரு 1 ரூபாய் வரிக்கும், ஒன்றிய அரசின் வரிகளின் பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பிலிருந்து வெறும் 23 பைசா மட்டுமே திரும்பக் கிடைக்கிறது? ஏன்? அதே நேரத்தில், பிற மாநிலங்கள் தாங்கள் வழங்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 1 ரூபாய் 66 பைசா அல்லது 6 ரூபாய் 90 பைசா வரை பெறுவது ஏன்?

நிதி நிர்வாகம் என்பது மக்கள் நலத்திட்டங்களை வெட்டுவது அல்ல.. மாறாக வளங்களை அறிவுப்பூர்வமாக நிர்வகிப்பதும், மக்களுக்கு முன்னுரிமை அளிப்பதும் தான் என்பதை தமிழ்நாடு நிரூபித்துக் காட்டியுள்ளது. ஆனால், ஒன்றிய அரசு என்ன செய்கிறது. எங்களின் உரிமையான நிதியை நிறுத்தி வைக்கிறது, நிதிப்பகிர்வை மறுக்கிறது. நிலுவைத் தொகையைத் தாமதப்படுத்துகிறது. பிறகு எமக்கே நிதி நிர்வாகம் குறித்துப் பாடம் எடுக்கிறது. இவை அனைத்தும் நடந்து கொண்டிருக்கும் வேளையில், ஒன்றியத்தின்சொந்தக்கடனோ அதிகரித்துக்கொண்டே வருகிறது.. அதன் வட்டிச் சுமை பட்ஜெட்டைச் இறுக்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய பல முக்கியமான ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி இன்னும் நிலுவையில் உள்ளது. தமிழ்நாடு அரசு அளித்துள்ள விரிவான விளக்கங்களின்படி, பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.10,000 கோடிக்கும் அதிகமான தொகையை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டியுள்ளது.

ஜல் ஜீவன் திட்டத்தையே எடுத்துக்கொள்வோம். இத்திட்டத்திற்காக ஒன்றிய அரசு இது வரை ரூ.5,914 கோடி மட்டுமே வழங்கியுள்ளது.. இன்னும் ரூ.3,112 கோடி நிலுவையில் உள்ளது.

எங்களின் சட்டப்பூர்வமான நிதியை நீங்கள் மறுக்கும் போதெல்லாம், ஆளுநர் வழியாகத் தமிழ்நாட்டிற்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தும் போதெல்லாம், எங்கள் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எங்கள் மக்களுக்கு எப்போதும் சொல்வது 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்! என்பதுதான்.

பல நிதி அறிவிப்புகள் வெறும் காகிதத்தோடு நின்றுவிடுகின்றன. உதாரணமாக, நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 'நகர்ப்புறத் திட்ட நிதியை' எடுத்துக் கொள்ளுங்கள்.. அது அறிவிக்கப்பட்டு இன்று வரை தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட வந்து சேரவில்லை.

'ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்!'

இன்று அதிகாரப் பலத்தால் கட்டுக்கதைகளை நீங்கள் கூறலாம். ரூ.10,000 கோடிக்கும் அதிகமான எங்களின் சட்டப்பூர்வமான நிதியை நீங்கள் நிறுத்தி வைக்கலாம், தரவுகளைத் திரித்துச் சொல்லலாம்.. டெல்லியிலிருந்து நிதி மேலாண்மை குறித்துப் பாடம் எடுக்கலாம். ஆனால், உங்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு பெரும் சக்தி உண்டு அது தான் மக்கள் சக்தி!

இவை அனைத்தையும் தமிழ் நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய அரசாங்கமானது தமிழ்நாட்டிற்கு எதுவுமே வழங்கவில்லை.. மாறாக புறக்கணித்துள்ளது.

என் வார்த்தையை குறித்து வைத்துக் கொள்ளுங்கள்..

நீங்கள் எங்களை எப்படி நடத்தினீர்களோ, அதே வழியில் தமிழ்நாட்டு மக்கள் ஏப்ரல் 23ஆம் தேதி அன்று உங்களுக்குப் பதிலடி கொடுப்பார்கள். மே 4ஆம் தேதி முடிவுகள் வெளிவரும் போது, தமிழ்நாட்டு மக்கள் உங்களுக்கு எதிராக வழங்கிய தீர்ப்பை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

தமிழ்நாட்டு மக்களுக்கு இன்று ஒரே ஒரு முழக்கம் தான் தெரியும்: 'ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. பேசினார்.